**Chapter XXIII code of Criminal procedure**
**DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, SHOLINGANALLR**
**DEPOSITION OF WITNESS**

**Calender** :
**Miscellaneous** : **CC.No.988/2024**
**Preliminary Register** :
**Police Station** : **Kanathur PS**

**Deposition of witness for** : **LW9/PW6**
:

**Name** : ஆனந்தன் காவல் ஆய்வாளர்(பாதுகாப்பு காவல் பிரிவு)
:
:
**Village** :
**Taluk** :
**Caste** :
**Calling** :
**Religion** :
**Age** :

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 05.06.2026.**

**(எதிரி ஆஜர், எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)**

அரசு தரப்பு முதல் விசாரணை

1. நான் தற்பொழுது சென்னை பாதுகாப்பு காவல் பிரிவில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 03.04.2019 அன்று நான் கானாத்தூர் காவல் நிலையத்தில் குற்றப்பிரிவு காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வந்தேன். அன்றைய தினம் தலைமை காவலர் ராஜசேகரன் பணியில் இருந்த பொழுது காலை 8.15 மணியளவில் புகார்தாரர் பவுல் வேன் இன்ஸ்பர்ஸ் ஆன் என்பவர் கொடுத்த புகார் அணி பெற்று தலைமை காவலர் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார். மேல்விசாரணைக்காக

என்னிடம் வழக்கு கோப்பை ஒப்படைத்தார். நான் சம்பவ இடம் சென்று சாட்சிகள் திருமதி ரபேக்கா திருமுருகன் ஆகியர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன்.

2. அந்த பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் அ. த சா. ஆவணம் 4 மற்றும் 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. எதிரிகளை தேடி வந்த நிலையில் 05.04.2019 தேதியன்று எதிரிகள் நீலாங்கரை காவல் நிலையத்தில் வேறு வழக்கு சம்பந்தமாக கைது செய்யப்பட்டுள்ள நிலையில் அந்த வழக்கில் கானத்தூர் காவல் நிலையத்திற்கு சம்பந்தப்பட்ட வழக்கிற்காக ஒப்புதல் வாக்கு மூலம் அளித்திருந்தனர். இந்த வழக்கு சம்பந்தமான வழக்கு சொத்தை நீலாங்கரை காவல் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டிருந்தது. அந்த வழக்கு சொத்தை படிவம் 91 கீழ் நீலாங்கரை காவல் நிலையத்திலிருந்து பெறப்பட்டு நான் நீதிமன்றத்தில் ஒப்படைத்தேன் வழக்கு சொத்து cross pen -1, sun glass1, bosch sound system-1 , cell phone-1, cash 15euro , laser machine with suitcase, hair clip, bottle wine, whisky, gin,-3,fiber fishing tool-1 ஆகியவைகள் கைப்பற்றி நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டது.

3. அவை மனுத்தாக்கல் செய்யப்பட்டு மனுதாரர் இடம் ஒப்படைக்கப்பட்டது. 29.04.2019 அன்று மேற்படி எதிரிகளை சென்னை புழல் சிறையில் சிறை கண்காணிப்பாளர் இடம் முன்பு சம்பிரதாய கைது செய்யப்பட்டு 30.04.2019 அன்று pt warrant மூலம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். இத்துடன் பட்டியல் சாட்சிகள் ஒன்று முதல் 5 வரை சாட்சிகளை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். எனது விசாரணை முடித்துக் கொண்டு எதிரிகளின் மீது சட்ட பிரிவுகள்457,380 ipc என் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

1. பொருட்கள் திருடு போனதாக சொல்லப்படுகிற இடம் individual villa ஆகும். அங்கு வசிப்பவர்கள் வசதியானவர்கள் என்றால் சரிதான். இந்த வடக்கு சம்பந்தமாக cctv காட்சிகள் எதுவும் நான் சமர்ப்பிக்கவில்லை. இந்த வழக்கு சொத்துக்கள் என்னுடைய விசாரணையில் நான் எதுவும் கை பற்றவில்லை வேறு வழக்கு சம்பந்தமாக வேறு காவல் நிலையத்தினர் கைப்பற்றினார்கள் என்றால் சரிதான். பட்டியல் சாட்சிகள் ஒரு முறை தான் விசாரணை செய்தேன் எங்கு வைத்து விசாரணை செய்தேன் என்று எனக்கு தற்பொழுது ஞாபகம் இல்லை.

2. இந்த வழக்கு சொத்துக்கள் புகார்தாரருடையதுதான் என்பதை நிரூபணம் செய்ய அதற்கு ஏதேனும் ஆவணம் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. எனது விசாரணையில் புகார்தாரர் இந்த பொருட்களை எந்த இடத்தில் வைத்திருந்தேன் என்று குறிப்பிட்டு சொல்லி இருந்தாரா என்றால் இல்லை, என்று போன பின்பு கைரேகை நிபுணர் வரவழைத்து அவரது அறிக்கையை ரகசியம் என்றால் கைரேகை நிபுணரை வரவழைத்தேன். ஆனால் அந்த அறிக்கையை தாக்கல் செய்யவில்லை. நான் சொல்வது போல் எந்த திருடும் நடக்கவில்லை என்றாலும் எதிரிகள் மீது நான் பதிபட்ட வாழ்க்கைக்கு ஆதரவாக நான் வழக்கு கோப்புகளை தயார் செய்து அதற்கு அனுசரணையாக சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல , புகாரில் குறிப்பிட்டுள்ள அனைத்து சொத்துக்களும் இவ்வழக்கில் மீட்கப்படவில்லை என்றால் சரிதான்.pt warrant மூலம் கைது செய்த பின்பு போலீஸ் காவலுக்கு எடுத்து விசாரணை செய்து என்ன என்றால் இல்லை.

3. புகாரில் குறிப்பிட்ட பொருட்கள் உண்மையாக காணாமல் போயிருந்தால் எதிரிகளை போலீஸ் விசாரணையில் எடுத்து மற்ற பொருட்களையும் விசாரணை செய்து கைப்பற்றி இருப்பேன் என்றாலும் அது போல் செய்யாததால் இது பொய்யான வழக்கு

என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் எதிரிகளுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும் எதிரிகள் மீது போடப்பட்ட பொய்யான வழக்கு என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை:</u>** இல்லை

**Sd/-M.N.**ராஜநந்திவர்மசிவா**,**
மாவட்ட உரிமையியல் மற்றும்
குற்றவியல் நடுவர்**,**
சோழிங்கநல்லூர்.